# உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார். சங் 37 : 4

**கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு**

நீ துக்கமுகமாயிருக்கிறது என்ன ? உனக்கு வியாதியில்லையே, இது மனதின் துக்கமே ஒழியே, வேறொன்றும் அல்ல. எனக்கன்பான சகோதரியே, சகோதரியே,

அர்தசஸ்டா ராஜா, அவருடைய பானபாத்திரக்காரராகிய நெகேமியாவைப் பார்த்து சொன்ன அதே வார்த்தையை, ராஜாதி ராஜாவாகிய இயேசு, இன்று உன்னையும் பார்த்து, **நீ துக்க முகமாயிருக்கிறது என்ன ?–**என்று கேட்கிறார். சகோதரனே,

இது மனதின் துக்கமே ஒழிய வேறொன்றும் அல்ல.

**ஆதலால் "கர்த்தரிடத்தில் மன மகிழ்ச்சியாயிரு"**

**ஏனெனில் உன் இருதயத்தின் வேண்டுதல்களை, உனக்கு அருள் செய்வார்.**

நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்.

**நம்பமுடியாதவைகளை, நம்பச் செய்கிறவர் நம் தேவன்,**

முடியாது, மாறாது, நடக்காது, கூடாது, வராது, போகாது, இருக்காது, பார்க்காது, சொல்லாது, என்று நீ சொல்லுகிற காரியங்களை, முடியும் மாறும், நடக்கும், கூடும் வரும், போகும் இருக்கும், பார்க்கும், சொல்லும் என்று சொல்லுகிறவர் நம்தேவன். அல்லேலூயா.

**ஏனெனில் வேதம் சொல்லுகிறது :** கசந்த மாரா மதுரமாகும்– அல்லேலூயா

ஆதலால், என் அன்பு சகோதரனே, சகோதரியே,

**"கர்த்தரிடத்தில் மனமகிழச்சியாயிரு"**

**பக்தன் பாடுகிறான்**

கசந்த மாரா, மதுரமாகும், வசந்தமாய் உன் வாழ்க்கை மாறும்
கண்ணீரோடே, நீ விதைத்தால், கெம்பீரமாய் அறுத்திடுவாய்.
இஸ்ரவேலை காக்கும் தேவன் உறங்கவில்லை, தூங்கவில்லை
இன்று கண்ட எகிப்தியனை என்றுமே இனி காண்பதில்லை

இந்த மாதத்தில் அடிக்கடி மேற்கண்ட அடிகளைப் பாடுங்கள். பாடிக் கொண்டே இருங்கள்.

**"வசந்தமாய் உன் வாழ்க்கை மாறும்"**

**1 சாமுவேல் 1 : 17 இல் அன்னாளைப் பார்த்து, தேவாலயத்தில் ஏலி கூறுகிறார்.**

நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட, உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்கு கட்டளையிடுவார் – என்பதாக.

**ஒரு ஆண்டு கழித்து தேவாலயத்தில் அன்னாள் கூறுகிறாள்;**

நான் கர்த்தரிடத்தில் கேட்ட, என் விண்ணப்பத்தின்படி எனக்கு கட்டளையிட்டார்.

என் அன்பு சகோதரியே, சகோதரனே,

**இரண்டு முக்கியமான குறிப்பை உங்களுக்கு எழுதுகிறேன்.**

1. முதலாவது, வேத வசனத்தைப் படியுங்கள், தியானியுங்கள், விசுவாசியுங்கள்.
2. இரண்டாவது, தேவனுடைய சத்தத்தைக் கேளுங்கள். அதுவரையிலும் நீ ஜெபித்தே ஆகவேண்டும்.

அன்னாள் எத்தனை ஆண்டுகள் பிள்ளைக்காக ஜெபித்தாள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒருநாள் தேவனுடைய ஆசாரியன் ஏலி வாயிலிருந்து **தேவனுடைய வார்த்தை புறப்பட்டது.** அற்புதம் நிகழ்ந்தது. இயேசுவின் வாயிலிருந்து வார்த்தை புறப்பட்டது. நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் சொஸ்தமானான்.

இன்று நீ பரிசுத்த ஆவிக்குள் ஜெபித்துக் கொண்டே வருகிறாய்.

ஒருநாள் அவர் உன்னோடு பேசுவார். அந்த வார்த்தையை நீ நம்பு. நீ அதிகமாக ஜெபித்ததினால், உபவாசித்ததினால், பொருத்தனை பண்ணினதால், கண்ணீர் வடித்ததால் அல்ல. தேவனுடைய சத்தம் வரட்டும் கட்டாயம் வரும்.

**கர்த்தரிடத்தில் மன மகிழ்ச்சியாயிரு. உன் இருதயத்தின் வேண்டுதல்களை, உனக்கு அருள் செய்வார். ஆமென்.**